இணைப்பு

[............326-ம் பக்கத்தில் உள்ள 381-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க]

தமிழ்நாடு வேளாண்மை-தொழிற்கழகத்தின் சார்பில் கீழ்க்கண்ட உள்நாட்டு/வெளிநாட்டு வகையான டிராக்டர்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன/தற்போது வழங்கப்படுகின்றன.

உள்நாட்டு வகையான டிராக்டர்கள்.

1. மேசி பெர்குசன்—1035.
   (Massey Ferguson—1035)
2. இண்டர்நேஷனல்—பி. 275
   (International—B. 275)
3. எஸ்கார்ட்.
   (Escort)
4. இந்துஸ்தான்.
   (Hindustan)

வெளிநாட்டு வகையான டிராக்டர்கள்.

(1) ஆர் எஸ். 09 டிராக்டர்.
[R. S. 09 Tractor (A.C.)]

(2) யு. 650—எம்.
(U. 650—M)

(3) செட்டார்—5511
(Zetor—5511)

(4) பைலாரஸ்.
(Byelarus)

(5) செட்டார்—2011.
(Zetor—2011)

(6) செட்டார்—2011
[(Zetor—2011) (Rice Special)]

(7) டி—25
[T. 25 (A.C.)]

(8) உர்சுஸ்—சி. 338.
(URSUS C. 338)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—தொடர்ச்சி.

உள்நாட்டு வகையான டிராக்டர்கள்.

வெளிநாட்டு வகையான டிராக்டர்கள்.

(9) ஐ.எம்.டி.—555.
(I.M.T.—555)

(10) ஃபோர்டு—3000.
(Ford —3000)

(11) ஐ.எம்.டி.—533.
(I.M.T.—533)

(12) இன்டர்நேஷனல்—பி. 276
(International—B. 276).

(13) மேசி பெர்குசன்—135
(Massey Ferguson—135)

குறிப்பு.—தமிழ்நாடு வேளாண்மை-தொழிற்கழகம் 31—3—70 வரை திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வந்தது. இத் திட்டத்தின் கீழ் பின்வரும் வகை டிராக்டர்கள் தவணை முறையில் உழவர்களுக்கு வழங்கப்பட்டது.

(1) மேசி பெர்குசன் (Massey Ferguson—1035)

(2) இண்டர்நேஷனல்—275.

(3) எஸ்கார்ட்.

(4) இந்துஸ்தான்.

மேற்படித் திட்டத்தின்கீழ், 406 பேர்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டன. டிராக்டர்களை அனுப்புமாறு ஆணைகள் கொடுக்கப்பட்டன. நாளது தேதி வரை உழவர்களுக்கு 259 டிராக்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. 25 பேர்களுக்கு வழங்கப்பட்ட கடன் ஒப்பளிப்பு அவர்களே கேட்டுக்கொண்டதன்பேரில் தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளது டிராக்டர்களுக்கு அதிகத் தேவை இருப்பதன் காரணமாகவும் உள்நாட்டின் உற்பத்தி செய்யப்படும் டிராக்டர்கள் பற்றுக்குறை காரணமாகவும் எஞ்சியுள்ள 122 டிராக்டர்களை உழவர்களுக்கு மேற்படி நிறுவனங்கள் இன்னும் வழங்கவில்லை. எனினும் எஞ்சிய டிராக்டர்களை கூடிய விரைவில் வழங்கத் தமிழ்நாடு வேளாண்மை—தொழிற்கழகம் தேவையான முயற்சிகளை எடுத்து வருகிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து போதிய கடன் வசதிகளை உழவர்கள் பெறுகின்றனர் என்ற முக்கிய காரணத்தினால் தமிழ்நாடு வேளாண்மை-தொழிற்கழகம் இத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டது.

சில நேர்வுகளில் இறக்குமதி செய்யப்படும் டிராக்டர்கள் உழவர்களின் தேவை அடிப்படையிலும் மேற்படி டிராக்டர்கள் கிடைப்பதைப் பொருத்தும் தமிழ்நாடு வேளாண்மை-தொழிற்கழகம் தவணைக் கொள்முதல் முறையில் மேற்படி டிராக்டர்களையும் வழங்கி வருகிறது. முன்னுரிமை அடிப்படையிலும் மாவட்ட வாரியாகவும் இவை உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களைப் பொறுத்தவரையில் அவற்றை இறக்குமதி செய்வது பற்றியும் நாட்டில் பல்வேறு மாநிலங்களிலுள்ள வேளாண்மை-தொழிற்கழகங்களுக்கு அவற்றை ஒதுக்குவது குறித்தும், இந்திய அரசு முடிவு எடுத்து வருகிறது. இறக்குமதி செய்யப்பட்டவையும் தமிழ்நாடு வேளாண்மை-தொழிற்கழகத்திற்கு ஒதுக்கப்பட்டவையுமான வெவ்வேறு வகை டிராக்டர்கள் அவற்றின் பரித்திறன் அவை தயாரிக்கப்படும் நாடு-தோராயமான விலை ஆகியவை பற்றிய விவரங்கள் கீழ்க்காணும் விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

I. கழகம் நேரிடையாக இறக்குமதி செய்து உழவர்களுக்கு விற்ற டிராக்டர்கள்.

தொடர் எண்.	டிராக்டர் வகை.	பரித்திறன்	தயாரித்த நாடு.	தோராயமான விலையும் விற்பனை வரியும்.
(1)	(2)	(3)	(4)	(5)
				ரூ.
1.	R.S. 09 டிராக்டர் (A.C.)	20	ஜெர்மன் குடியரசு	11,602
2.	U 650—M	65	ருமேனியா	26,805
3.	செட்டார் 5511	55	செகாஸ்லோவேக்கியா	32,000 (நடப்பு தொகுதி)
4.	பைலாரஸ்	50	ருஷ்யா	23,000
5.	செட்டார் 2011 டிராக்டர்	25	செகாஸ்லோவேக்கியா	24,000
6.	செட்டார் 2011 (ரைஸ் ஸ்பெஷல்)	25	செகாஸ்லோவேக்கியா	24,000
7.	T. 25	20	ருஷ்யா	19,500

I. கழகம் நேரிடையாக இறக்குமதி செய்து உழவர்களுக்கு விற்ற டிரரக்டர்கள்—தொடர்ச்சி.

தொடர் எண்.	டிராக்டர் வகை.	பரித்திறன்.	தயாரித்த நாடு.	தோராயமான விலையும் விற்பனை வரியும்.
(1)	(2)	(3)	(4)	(5)
	II நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்டு கழகத்தின் பிரதிநிதிகளுக்கு விற்கப்படுபவை			
8.	உர்சுஸ் C 338	35	போலந்து	25,354
9.	I.M.T. 555	55	யுகாஸ்லேவியா	31,251
10.	ஃபோர்டு 3000	47	இங்கிலாந்து	34,509
	III. நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்டு கழகம் குறிப்பிடுகிறவர்களுக்கு விரைவில் விற்கப்படவிருப்பவை.			
11.	I.M.T. 533	35	யுகாஸ்லேவியா	30,000
12.	இன்டர்நேஷனல் B 276	35	இங்கிலாந்து	34,000
13.	மேசி பெர்குசன் 1035	46	,,	30,000

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS